# வெற்றிமணி

Registered No. 10, 845

மலர் 2 | 1 – 12 – 56 விலை சதம் 25 | இதழ் 12

தமிழ் என்று தோள் தட்டி ஆடு — நல்ல
தமிழ் வெல்க வெல்க என்று தினம் பாடு.

* * * *

## வெற்றிமணி நேயர்களுக்கு ஓர் நற்செய்தி

1957 தைமாதம் தொடக்கம் வெற்றிமணியின் கௌரவ ஆசிரியராக வித்துவான் மு. கந்தையா அவர்கள் கடமையாற்றுவார்கள். —ஆசிரியர்.

## நேயர் கடிதம்

வெற்றிமணி ஆசிரியருக்கு,
ஐயா !

இலங்கையில் எத்தனையோ போட்டி விமர்சனிகள் வெளிவந்துள்ளன. வெற்றிமணி விமர்சனி மிகவும் திறம்பட அமைந்துள்ளது. போட்டியில் பரிசுபெற விரும்பும் எந்த நேயரும் அகராதிகளைப் புரட்டிப் பார்த்து நேரத்தையும் சக்தியையும் வீணாக்குவதிலும் பார்க்க ஒரு வெற்றிமணி இதழைப் பார்த்து விடை எழுதுவது மிகவும் பயன் தருவதாகும். சுதந்திரன் போட்டி இல. 30 ல் முதலாம் பரிசுபெறக் காரணமாக இருந்தது வெற்றிமணி விமர்சனியே யாகும். போட்டி நேயர்களுக்கு மாத்திரமன்றி மாணவர்களுக்கும் சிறந்த தொண்டுபுரிய வெற்றிமணி ஆரம்பித்துள்ளது வரவேற்கத் தக்கதாகும்.

வெற்றிமணி நீடூழி வாழ்க !!

முன்னக்குளம், 16;11.56. — திருமதி எஸ். ஆச்சிமுத்து.

வெற்றிமணி: ஆண்டு சந்தா ரூபா 2 சதம் 50,
6 மாதச் சந்தா ரூபா 1 சதம் 50. தனிப்பிரதி சதம் 25.

## சிறுவர் போட்டி இல. 17 இன் முடிவு

முதற் பரிசு ரூபா 250, முற்றிலும் சரியான விடையனுப்பிய கீழ்க் காணும் 6 பேர்களும் தலைக்கு 41 ரூபா 67 சதம் பெறுகின்றனர்.
1 கே. சோமசுந்தரம்—திஹாரியா. 2 வே. வன்னியசிங்கம்—குரும்ப சிட்டி, 3 என். ஏ. குசையா—வங்காலை, 4 கே. ரங்கநாதன்—உக்கு வளை, 5 ஏ. இராசரத்தினம்—நாவலப்பிட்டி, 6 ஏ. வேலுப்பிள்ளை அரயைக்க.

இரண்டாவது பரிசுரூபா 150:- ஒருபிழையுடன் விடைகளனுப்பிய கீழ்க் காணும் 13-பேர்களும் தலைக்கு 11-ரூபா 54-சதம் பெறுகின்றனர்.
1 கே. சோமசுந்தரம் 2 வே. வன்னியசிங்கம் 3 என்.ஏ. குசையா 4 கே. ரங்கநாதன் 5 ஏ. இராசரத்தினம் 6 ஏ. வேலுப்பிள்ளை 7 திருமதி ஆர். இராசரத்தினம்—மண்டூர் 8 திருமதி அடைக்கலம்யோசேப்பு-நாளுட்டான் 9 வி. சபாபதிபிள்ளை-வட்டுக்கோட்டை 10 பூமணியோ-சேப்பு-யாழ்ப்பாணம் 11 ந. ஆ. சுப்பிரமணியம்-கோப்பாய் 12 கே. எம். பி. கனகராசா 13 செல்வி பரமேஸ்வரிகுமாரசாமி-கந்தரோடை
விசேஷபரிசு:- 48-ரூபாவுக்குக் கூப்பன்கள் அனுப்பிய ஏ. வேலுப்பிள்ளை ரூபா 60 பெறுகின்றார். 44-ரூபாவுக்கு அனுப்பிய வே. வன்னியசிங்கம் ரூபா 25 பெறுகின்றார். 40 ரூபாவுக்கு அனுப்பிய என். ஏ. குசையா ரூபா 15 பெறுகின்றார்.

பரிசுபெற்ற நேயர்களுக்கு எமதுவாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம் பரிசுத்தொகைகள் 15-12-56 க்கு முன் அனுப்பப்படும். ஆசிரியர்

## சிறுவர் போட்டி இல 18

வரக்கூடியவிடைகள்:-


| | |
|---|---|
| 1 வடு, வசை, வதை, வலி | 4 வாபி, வாவி, வாரி |
| 2 வாடை, வாயு, வாசி | 5 குறை, குறி, குடி, குசை |
| 3 நகை, நடை, நடு, நகு | 6 மலை, மழை, மரு, மழு |

### வெற்றிமணி பழயபிரதிகள்

1956 தை ஆண்டுமலர் உட்பட 1—11—56 இதழ் வரையும் [11 பிரதிகள்] தேவையானோர் 1 ரூபா போஸ்ரல் ஆடர் அனுப்புக.

### பேனநண்பர்கள்

152. ஏ. பி. றிச்சாட்பர்ணாந்து -நல்லாந்தளுவ மதுரங்குளி
153 எஸ். மோகன் -கணேஸ்வரம்-26, 28 புத்தளம்வீதி குருநாக்கல்
154 எம். ஏ. எம் உசன் அரசினர் சிரேஷ்டபாடசாலை ஓட்டமாவடி.




அன்பார்ந்த மருமக்களுக்கு!

தீபாவளி வாழ்த்துக்கள் அனுப்பிய மருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். "ஜாலத்தீவு" பல மருமக்களை மகிழ்விக்கின்றதென்பதைப் பலர் தெரிவிக்கும் பாராட்டுகளிலிருந்து அறிந்து கொண்டேன். "பெண்களுக்குக் கல்வி அவசியமா" என்ற விஷயத்தைப் பாராட்டியும் பலர் எழுதியுள்ளனர். ஜாலத்தீவு — தொடர்ச்சியைப் படிக்கத்தவறுதீர்கள். ஆண்டு மலரில் தங்கள் புகைப்படங்களை (Photos) வெளியிட விரும்பும் அங்கத்தவர்கள் 10-12-56 க்கு முன் அனுப்பி வைக்கும்படி கேட்கப் படுகின்றனர். ஆண்டு மலரில் இதுவரை சேர்ந்த அங்கத்தவர்களின் பெயர்களும் 1-12-56 க்கு முன் சேருகின்றவர்களின் பெயர்களும் வெளியிடப்படும். அங்கத்தவர்களின் விலாசங்கள் மாற்றப்பட வேண்டுமாயின் அறிவிக்கவும்.

"மணிமாமா"

## ஆத்திசூடி (தொடர்ச்சி)

46. சீர்மை மறவேல்
    புகழுக்கு ஏதுவாகிய குணத்தை நீ மறந்து விடாதே.

47. சுளிக்கச் சொல்லேல்.
    கேட்பவர் கோபிக்கும் படியாக நீ ஒன்றையும் பேசாதே.

48. சூது விரும்பேல்.
    சூதாடுதலை நீ ஒருபோதும் விரும்பாதே.

49. செய்வன திருந்தச் செய்.
    செய்யுங் காரியங்களை செவ்வையாக நீ செய்,

50. சேரிட மறிந்து சேர்.
    அடையத்தகும் நன்மையாகிய இடத்தை தெரிந்து நீ அடைவாயாக.

51. சை யெனத் திரியேல்.
    பெரியோர் உன்னைச் சீ என்று அருவருக்கும்படி நீ துஷ்டனாய்த்திரியாதே

52. சொற் சோர்வு படேல்,
    நீ பிறரோடு பேசும் சொற்களிலே மறதிப்படப் பேசாதே.
    சொல்ல வேண்டுவதை மறவாமல் சொல் என்பது கருத்து,

53. சோம்பித் திரியேல்.
    நீ செய்ய வேண்டும் முயற்சியைச் செய்யாமல் சோம்பல் கொண்டு வீணாகத் திரியாதே,

54. தக்கோனெனத் திரி.
    உன்னைப் பெரியோர்கள் யோக்கியன் என்று புகழும்படி நீ திரி

55. தானமது விரும்பு.
    சற்பாத்திரங்களிலே தானம் செய்வதை நீ ஆசைப்படு.

# ஜாலத்தீவு



## " சிரிக்கும் சிறைச்சாலை "

ராஜ பவனத்தின் முன்னால் மெர்க்குரி விளக்கொன்று ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. சிந்தன் மேல்மாடியி லிருந்தவாறே தமது பார்வையை வெளியே செலுத்தினர். அப்போது — எங்கிருந்தோ " ஜிவ் " வென்று பறந்து வந்த அந்தக் கட்டாரி அந்த மெர்க்குரி விளக்கின் பல்பை சுக்கல் நூறுக்கியது. மறுகணம் சிந்தனின் கரத்திலிருந்த ரிவால்வர் கனலைக் கக்க ஆரம்பித்தது. பயன் பூஜ்யமே.

மறுநாட் காலை — படுக்கையை விட்டெழுந்ததுமே திருக்குறளை எடுத்து வழக்கம் போல் முதற்குறளை மிகவும் பயபக்தியுடன் படித்தான் இடியட்; அப்போது வரதன் வரவே தம் கமிராவை எடுத்துக் குறும்பு செய்ய ஆரம்பித்தான்.

" வரதா ! எங்கே அகப்பையை வலது கையிலே வச்சு — இடது கையை இடுப்பிலே வையேன் .! அடடா ! அப்படியே அப்பன் முருகன் மாதிரி யிருக்கப்பா ! ஆஹா எச்ஸலன்ட் ஸ்நாப் ! "

" அட ஏன்தம்பியிது ? சுன்னா பின்னானு எதுனைக்கும் எடுத்து தொலைச்சிடாதே. அப்புறம் ஆயுசு கொறைஞ்சிடுமா ? அட மண்டு ! என்று கூறி கேலியாகச் சிரித்தான் இடியட்.

இவர்களது சந்தடிகேட்டு எழுந்த சிந்தன் " என்னப்பா ஆரம்பிச்சுட்டீங்களா உங்க ராமாயணத்தை ? " என்றார்.

" இல்லையண்ணா ! வரதனை ஒரு போட்டோ பிடிக்கலாம்னு நெனைச்சேன். ..... அதுதான் ! " குதிரையை போட்டோ எடுத்தே யானால் அதுக்கு முதல்லே கால் இருக்காது. இல்லே, நிச்சயம் தலையிருக்காது. நல்ல வேளை வரதனை வேறு கொலைபண்ணாமே விட்டாயே ! அந்த மட்டிலும் சேமம் ! " ... என்றார் ரகளையோடு.

அப்போது போலிஸ் கமிஷனர் நாகராஜன் வரவே இருவரும் உரையாடத் தொடங்கினர். " டாக்டரை சாயக்காரச் சந்தானம் தான் கொன்றான் என்று எப்படி யறிந்தீர்கள் ? டாக்டரின் சவத்திற்கு ஏன் தலையைக் காணோம் ? எல்லாம் ஒன்றுகூட விளங்கவில்லை, தெளிவாகக் கூறுங்கள்." என்றார் கமிஷனர். " ஹும் !... வந்தவுடனேயே கேள்வி பாணத்தை வீசத் தொடங்கி விட்டீர்களா ? கேளுங்கள் சுருக்கமாகச் சொல்கிறேன்: சந்தானம் நடந்து கொண்ட விதம் என்னை ஐயுறச் செய்தது. அவனது கையிலே கத்திக் கோடுகளும் சிவப்புக் காயமும் இருந்தது,"

" உடனே தீர்மானித்து விட்டீர்களா ?

" பொறுங்கள் ஸார் ! டாக்டரின் மகளைக் காப்பாற்றியதாக நடித்ததெல்லாம் முன்னேற்பாடான சதி. அருவியூர் ஆனந்த முதலியாரின் மகளுக்கு வழக்கமாகச் சிகிச்சை செய்து வந்தார் டாக்டர் "

" மிஸ்டர் சிந்தன் எனக்கொரு சந்தேகம்! முதலியாரின் மகளுக்கு டாக்டர் ஏன் வழக்கமாகச் சிகிச்சை செய்து வரவேண்டும்? தீராத வியாதியோ? 'கமிஷனர் ஸார்! சபாஷ்! பொருத்தமாகக் கூறி விட்டீர்களே! பெரிய இடத்து விஷயம் தான் தெரிந்ததுதானே. சதா ஆஸ்பத்திரியாகத் தான் இருக்கும் வீடு. தலைக்கனத்தினால் தாறுமாறாக நடந்து — ஒன்றுக்குப் பத்தாக கொள்ளையடித்து மனிதாபிமானத்தை மறந்த மரப்பொம்மைகளாக வாழ்கிறார்களல்லவா அதனாற்றான்."

" சபாஷ்! நன்றாகப் பேசுகிறீர்களே! சிந்தன் பேசாமலிருங்கள். இதுவேறு எவரும் நம்மைத் தவறாகப் புரிந்துகொள்ளப் போகிறார்கள்."

" தவறு யார் செய்தாலும் ஒன்றுதானே? அநியாயத்தைக் கண்டிப்பதால் தவறென்று மில்லையே."

" ஒரு சமயம் வெறுப்புற்ற முதலியாரே......"

" தவறு; அந்த நிலைமை அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. சந்தானமும் அமாவாசையும் ஒரு கூட்டத்திற்கே உளவாளிகள் ஸார்!"

" அப்படியா? ....."

" ஆம்! கேளுங்கள்: சேட் தனபாலின் கொலை சம்பந்தமாக அலைந்துவிட்டு நானும் நம்ம இடியட்டும் மோட்டார் சைக்கிளில் நீல மலைச்சாரலில் வந்து கொண்டிருந்தோம். முன்னேற்பாட்டின்படி ஏதோ கொள்ளை நடத்தியிருக்கிறார்கள்."

அதற்குள் இடைமறித்த இடியட் " அங்கே மூன்றுகட்டாரி — ஒரு கைக்குட்டை — ஒரு தலையற்ற பெண்ணின் பிரேதம் முதலியவற்றைப் பார்த்தோமே அண்ணா!" என்று நினைவூட்டினான் இடியட்.

"வரவர, நம்ம இடியட்டும் திறமைசாலி யாயிட்டானே பார்த்தீங்களா ஸார்!"

" அதுதான் தம்பிக்கேற்ற பொருத்தமான பெயர் வைத்திருக்கிறீர்களே! போதாதா?

" அது சும்மா தமாஷுக்காகத் தான் கூப்பிடுகிறது. நீங்க வேறே! ம்! கேளுங்கள்; நாங்கள் கண்ட அந்தப் பெண்ணின் பிரேதத்தை நன்கு ஆய்ந்ததில் அது வழிப்பறிக் கொள்ளை யென்று புரிகின்றது.

" போகட்டும் 'S' என்று கத்தியில் அடையாள மிட்டிருப்பதேன்"?

" கொள்ளைக் கூட்டத் தலைவனின் குறியாக இருக்கலாமென் றெண்ணுகிறேன்."

" தலையை வெட்டுவானேன்."

" அதுதான்ஸார் மர்மக்கொலை யென்பது. எவரும் எளிதில் அறிந்து கொள்ள முடியாததற்கான வழியிது " என்றவாறே அந்தக்கைக்குட்டை கடுதாசி, கட்டாரி முதலியவற்றை போலீஸ் கமிஷனரிடம் கொடுத்தான் சிந்தன்.

" நாதசாமி டாக்டரின் தலைவரட்டும்; அமாவாசையும் — சந்தானமும் உதவியாக இருப்பார்கள், ஜாக்கிரதை!" இரும்புமனிதன் அதற்குமேல் கமிஷனரின் உடல் சும்மா விருக்கவில்லை. துடிதுடிக்க ஆரம்பித்தது. நமக்கு வந்த தகவலின்படி வனபுரி கொள்ளையும்! ........."

" இவர்களே தான்! சந்தேகமேயில்லை!"

மேலும்பல வினாக்களைக்கேட்டுப் புரிந்துகொண்டார் போலீஸ் கமிஷனர்.

**இந்தச்சமயம் :—**

எங்கிருந்தோ பறந்து வந்த கட்டாரி சமையலறையின் ஒரு மூலையிலே குத்திட்டு நின்றது. குழம்பு தாளித்துக் கொண்டிருந்த வரதன் அதை அப்படியே போட்டுவிட்டு — அந்தக் கட்டாரியைப் பிடுங்கிக் கொண்டு ஓடோடியும் சென்று சிந்தனிடம் கொடுத்தான். அவர் அதை வாங்கியதும் அதில் சுற்றப்பட்டிருந்த காகிதச் சுருளைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார், "சி. ஐ. டி. ஸார்! உங்களது முயற்சிக்கு எம் அனுதாபம். கருங்கல்லில் கத்தி தீட்ட முனைவது கயமை; மதயானையின் மத்தகத்திலமர்ந்து விளையாட மழலைகூட விரும்பாது. அனாவசியமாகத் தலையிடாதீர்கள் ஜாக்கிரதை!" — இரும்பு மனிதன்.

சிந்தனின் சிந்தனை படர்ந்த — செல்வச் சிரித்த முகம் கோபத்தின் சொரூபமானது. எறும்புக்கு இறகு கொடுத்து ஈசலாக்குவது அதன் அழிவுக்கென் றுணரவில்லை மடையர்கள்! கமிஷனர் ஸார்! எனது அறிவுக்கும், உங்கள் துப்பாக்கிக்கும் நல்ல தருணம் கிடைத்து விட்டது" என்று கர்ஜித்தான் சிந்தன். கமிஷனர் நாகராஜனே பாவம் அசந்து போய் விட்டார்.

**அப்போது ;—**

மிடுக்குடன் வந்த வரதன், "இப்ப இரும்பு மனுசனைப் புடிக்கனும் அவ்வளவு தானே தம்பி?" என்றான்.

கமிஷனர் ஸார்! நம்ம வரதனின் ஐடியாவை லிஸ்ஸின் செய்தீர்களானாலே போதும். நீங்க டுமென்ஸாம் சர்பிரைஸ் ஆயிடுவீங்க ஆமாம்! என்றான் இடியட். உடனே கொல்......லென்ற சிரிப்பொலி கிளம்பியது.

"சிந்தன் ஏது பய இங்கிலீசையும் — தமிழையும் போட்டு கொலை பண்றான்?" இவனாவது தேவலையே! நம்ம சர்க்காரு செய்யற வேலை இதைவிட மோசமாவுல்லயிருக்கு! சுடுகளியை நாய் கிண்டினால் கேட்கவும் வேண்டுமோ? ஹூம்!...... பிச்சைக்காரன் வாந்தி யெடுத்தாற் போலத்தான் — போங்கள்" என்றலுத்துக் கொண்டார் சிந்தன்.

"நம்ம இடியட்டுத் தம்பியை சமைய ரூமுக்கு வரச்சொல்லுங்க நல்ல முறுகலான சீடை உருண்டை செஞ்சு வெச்சிருக்கேன்" என்றான் வரதன்.

"எதுக்குடா அது?..." என்றான் சிந்தன்.

"அட என்னா தம்பி நீ ஒண்ணு. இரும்பு மனிசன் வந்ததும் அவன் கொட்டாவி விடுற சமயமா பாத்து எல்லாத்தையும் கொட்டீட்டா அவன் விக்கிக்கிட்டு முழிப்பான் அப்போ அவன் கையிலே வெலங்கை மாட்டீட்டாப் போச்சு."

"ஹ ஹ் ஹா! ஏன்டா இரும்பு மனுசனென்ன எறும்பா பிடிப்பதற்கு?"

" அட யானையாத்தான் இருக்கட்டுமே! அந்தப் பெரிய யானையே உத்தனூண்டு சித்தெறும்பே காதுலே விட்டா செத்துப் போவுது. நீ என்னவோ?" ... ஒரு சிரிப்பொலி!

கமிஷனரோ கண்களில் நீர் வடியும் வரை சிரித்தார், ஹும்! ஒங்களைப் போல பிள்ளைங்கல்லாம் துப்பறியப் போயித்தான் இப்ப துட்டு மழை பெயுது! ஒலகமே கெட்டுப் போச்சு! ஹும்!... இதன் முடிவு என்ன ஆகப் போறதோ?" என்ற வாறே சமையலறையை நோக்கிச் சென்றான் வரதன்.

" கமிஷனர் ஸார்! இனிமேல் ஒவ்வொரு விநாடியும் ஜாக்கிரதை யாக இருங்கள், நான் முன்பு கூறியபடி அமாவாசையையும் கவனித்துக் கொள்ளுங்கள். சரி நேரமாகி விட்டது, போய் வாருங்கள்!" என்று கமிஷனரை அனுப்பி விட்டுத் தம் படுக்கையிற் சாய்ந்தார் சிந்தன்.

**மறுநாள் காலையில் :—**

" தம்பி!" என்றகுரல் சிந்தனைப் படுக்கையிலிருந்து தட்டி எழுப் பியது. " தம்பி மகாசோளி சாஸ்திரம் பார்த்ததுலே இரும்பு மனுஷ னைப் புடிச்சிடலாம்னு சொல்லுது." என்றவாறே தன் பையிலிருந்த சோலிகளைக் குலுக்கிக் கீழே போட்டான்.

" சே! போடா அபசகுனமே! இரும்பு மனுஷனைக் கூட்டிவா ரேகை பார்த்து சொல்றேன்னு. சொல்வாய் போலிருக்கே! எண்ணாயிரம் ஏழு மலையான் களென்ன — தேவலோகமே படைதிரட்டி வந்தாலும் இரும்பு மனிதனை வெல்ல முடியாது. எல்லாம் மேல்மாடியை உபயோகப் படுத் தும் முறையிலே இருக்கின்றது."

" சரிதான்தம்பி காப்பி ஆறிடப்போவுது சாப்பிடு, இதோ வாரேன்" என்றவாறே இறங்கிச் சென்றான்.

திடீரென்று — டெலிபோன் மணி அலறியது.

" ஸார்!— ஆபத்து!— மன்னியுங்கள்!..."

ஆம்! போலீஸ் கமிஷனர் நாகராஜனே தான் பேசினர்.

" தெளிவாகக் கூறுங்களேன்."

சந்தானம் நேற்றிரவு எப்படியோ தப்பிவிட்டான். அமாவாசை நான் இல்லாத சமயம் உயர்தர அதிகாரிபோல் வேடமிட்டு வந்து செய்த சூழ்ச்சி ஸார்!—

" சரி சரி வருந்தாதீர்கள். முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும். கொல்லன் தெருவிலேயே ஊசி விற்றுவிட்டான் உருப்படியில்லாதவன்; இதோ வருகிறேன்!"

டக்—கென டெலிபோனைக் கீழே வைத்துவிட்டுத் தம் காரைச் செலுத்தினர் போலீஸ் ஸ்டேசனை நோக்கி!

சிறைச்சாலையின் கம்பிகள் வளைக்கப்பட்டிருப்பது முதல் யாவற் றையும் நன்கு கவனித்தாராய்ந்த சிந்தன் கமிஷனரின் காதில் ஏதோ கூறி னர். உடனே கமிஷனர் நாகராஜனின் முகம் இருண்டது. அவர்களது திட்டத்தைக் கண்ட சிறைச்சாலை சிரித்தது கோரமாக. — வளரும்.

# பெண்களுக்குக் கல்வி அவசியமா? (தொடர்ச்சி)

(எம். ஐ. எம். அமீன் — தும்புளுவாவை)

ஒரு இரட்டை மாட்டு வண்டிக்கு இரு எருதுகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு குடும்பத்திற்கும் கணவன் மனைவி அவசியமேயாம். அவ்வெருதுகளில் ஒன்றின் காலொடிந்தால் வண்டியை ஒற்றையால் இழுத்துச் செல்ல முடியுமா? கல்லும் முள்ளும் நிறைந்த வாழ்க்கைப் பாதையில் படிக்காத பெண்டிர் தலைமைப் பதவி எற்று நடித்தால் அதே கதிதான் அடைய வேண்டும். அதனால் கணவனுக்கு எந்நேரமும் அதிகமான பொதிகள் சுமக்கவேண்டி நேரிடுமல்லவா? படித்த மாதராயிருந்தால் கணவனுக்கு உறுதுணையாயிருந்து கணவன் வேலைகளில் தானும் பங்குகொண்டு கணவனை மகிழ்விக்கலா மல்லவா? கணவனின் விருப்பத்தைக் குறிப்பாலறிந்து ஆவன செய்பவள் படித்த பெண்தானே. இல்லற ஜோதியை இனிதுறத் துலக்கி அமர வாழ்வு வாழவதற்குப் பெண் கற்றவளாய் இருக்க வேண்டாமா? அறிவிலிகளால் இம்மா பெரும் காரியத்தைச் சாதிக்க முடியுமா? கட்டிய மனைவிக்குக் கல்வி எனும் அகக்கண் இல்லாவிட்டால் மூடன் ஆஸ்தி முழுவதும் நாஸ்தி என்பதற்கொப்பக் கணவன் வியர்வைநீர் சிந்த உழைக்கும் இருநிதி முழுவதும் ஒரு நொடியில் அழிந்து போய்விடும். கோபத்தால் கர்ஜிக்கும் கணவனை சாந்த சொரூபியாய் ஒரு நொடியில் மாற்ற கற்ற மனையாளால் முடியுமல்லவா?

கணவனுக்கு அவ்வப்போது மனதுக்குகந்த உணவை அறுசுவையுடன் படைத்துக் கொடுத்தாலன்றோ கணவன் உள்ளம் பூரிக்கும். உணவைக் கண்டாலே பிறர்மனை உண்டி விரும்பாச் சைவர்களும் வாயூறும் படி உணவைப் படைக்க வேண்டாமா? கட்டிய மனையாள் நன்ருய் சமைத்தாற்ருனே கணவனும் சுற்றத்தாரை, தன் நண்பர்களை விருந்துக்கு அழைத்து வருவான். ஒரு பெண்ணுக்கு ஆயிரமாயிரம் நட்சத்திரமளவு அழகு இருந்தாலும் கல்வி யில்லாவிட்டால் பயனென்ன? எவருக்குத் தன் அழகைக் காட்டவேண்டு மென்பதை அறிவிலிப் பெண்கள் அறிவார்களா? அறிவிலிப் பெண்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்குக் கசப்பாய்த் தானிருக்கும். ஒவ்வொரு செயலும் வெறுக்கத்தக்கதாய்த் தானிருக்கும். அவள் சமைத்த அறுசுவை உணவிலும் அவளின் அறியாமையே மிளிர்ந்து நிற்கும். ஆகையால் அவளைக் கணவனும் வெறுப்பான். உலகோரும் வெறுப்பார்க ளல்லவா?

ஊமைக்குச் சங்கீத இராகமிருந்து பயனுண்டா? கல்வியில்லாப் பெண்டிரின் 'அழகும் அதோகதிதான். பெண்டிருக்கு அழகு கொடுப்பது கல்வியே யல்லாது சுருண்ட கூந்தலும் வெண்தோலும் அல்ல.

> குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்சளழகும் அழகல்ல — நெஞ்சத்து
> நல்லம் யாமெனும் நடுநிலை மையாற்
> கல்வி யழகே அழகு.

என்று நாலடியாரில் நன்ருய் வர்ணிக்கப் பட்டிருக்கிறது

நம் நாட்டுப் பெண்கள் படிப்பதைச் சில ஆண்களே வெறுக்கிருர்கள் தான். பெண்டிர் படித்தால் அவர்களுக்கு ஆணவம் வந்துவிடுமென்றும் ஆண்களேயும் அடக்கி ஆள முயற்சிப்பார்கள் என்று விதண்டாவாதம் பேசுகிருர்கள். படித்து உத்தியோகம் பார்க்கவா ? என்றும் கூறுகிருர்கள். ஆயினும் உண்மையை அவர்கள் அறியவில்லைப் போலும். ஆண் பெண் இருபாலாரின் மனமும் ஒரே தன்மை உடையது. ஆதலால் பெண்களுக்கும் கல்வி கற்பித்தாற்ருனே நல் ஒழுக்கம், அமைதியுடையவர்களாய் வாழ்வார்கள். " ஆறு பணத்திற்குக் குதிரையும் வேண்டும்: ஆறு கடக்கப் பாயவும் வேண்டும் " என்றல்லவா ஆண்கள் குதர்க்கம் பேசுகின்ருர்கள். பெண்கள் படிக்கவும் கூடாதாம் நல்லொழுக்க முள்ளவராய் நடக்கவும் வேண்டுமாம். இது உலகில் நடக்கக் கூடிய காரியம் தாஞ ? இது " கஞ்சிக்கும் ஆசை மீசைக்கும் ஆசை " என்றது போலல்லவா முடிகின்றது. பெண்கள் நன் முறையில் கல்வி பயிலுவதால் கற்புடைமை முதலாம் நல் ஒழுக்கங்களும் கணவன்மீது மாரு அன்பும், கீழ்ப்படிதலும் உண்டாகுமே தவிர ஒருநாளும் தீங்குண்டாக மாட்டாது. இக்காலத்தில் கல்விகற்ற எத்தனையோ இளங்காளைகள் கூடப் பெரியாரைக் கண்டால் கீழ்ப்படிகின்ருர்கள். அதேபோல் பெண்களும் ஏன் கணவன்மாருக்குக் கீழ்ப்படியார்கள். அவர்களுக்கும் நியாயமான உரிமைகள், குடும்பப் பொறுப்புகள் இவற்றை விட்டுவிட்டால் பெட்டிப் பாம்பாய் அடங்கி விடுவார்கள். அவர்களின் ஆலோசனையையும் எக்கருமத்திலும் பெற்று வந்தால் குடும்பம் எந்நேரமும் ஒருமித்துக் கருமம் ஆற்ற முடியும். ஒருசில மாதர்கள் படித்துக் கெட்டுப் போஞர்கள் என்னும் காரணத்தை வைத்துக் கொண்டு பெண்கள் படிக்கக் கூடாது என்று முட்டுக்கட்டை யிடுவது நியாயமா ? இக்காலத்தில் எத்தனையோ ஆண்களும் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து படித்துவிட்டுக் கூடாவழிகளில் நடக்கிருர்கள் தானே. ஏன் மனிதகுலம் ஆண்வர்க்கத்திற்கு மாத்திரம் இம் முட்டுக் கட்டை போடாம லிருக்கின்றது. தன் மனைவிக்குக் கண்களிருந்தால் பிறகட்டழகர்களைக் கண்டு காதலிப்பாளென எண்ணி ஒருவன் ஒரு குருடியை மணப்பதற்கு ஒருப்படுவாஞ ? ஆம் அதுபோன்று தான் கல்விகற்றதனல் ஆணவம் கொண்டு ஆயிரத்திலொரு பெண் கெட்டுப் போஞள் என்று கூறி மாதர் குலத்திற்கே படிக்கக் கூடாதென அகம்பாவம் பேசுவது எவ்வளவு மதியீனம். நண்பகலில் வெயில் மஞ்சள் நிறமாய் தெரிவது கண்ணின் குற்றமேயல்லாமல் வெயிலின் குற்றமா ? அறிவற்ற சனங்களுக்கு உள்ளத்தை உருக வைக்கும் அரிய இதோப தேசங்கள் புரிந்தாலும் விளங்குமா ? அதை அவர்கள் பிள்ளைத் தாலாட்டு என்று கருதி மேடையில் வீற்றிருந்தே நித்திரை செய்கிருர்கள். இறுதியில் செவிடன் காதில் ஊதிய சங்குபோலத்தான் முடிவடைகின்றது. ஒரு சில ஆடவர்களுக்கு மாதர்கள் இவ்வளவு இழிநிலையில் இருப்பது தான் மகிழ்ச்சி போலும். கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் வாழ்வது தாஞ வாழ்க்கை. இறையோன் தந்த உலக இன்பங்களை இனிதுற நுகர வேண்டாமா ?

மானிலத்திலே வாழ்வதற்கு—மனிதனுய் வாழ்வதற்குக் கல்வி அவசியம் தானே: மானிட சரீரத்திலே பிரதான பாகம் கண். அதனிலும் போற்றத்தக்கது தன் உயிரேயாம் — உயிரினும் சிறந்தது இவ்வுலகில் உண்டா ? ஆம் கற்பென்னும் விலைமதிக்க முடியாத திரவியம் இருக்கத்தானே செய்கிறது. தன் கற்பைக் காப்பாற்றக் கல்வியினுலே யன்றிப் பிறர் உதவிகோரி வெற்றி யடையலாமா ?

" சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை."

என்று பொய்யா மொழியாரும் நவின்றிருக்கிருரல்லவா ? உலகிலுள்ள புகழ்பெற்ற நூல்களி லெல்லாம் பெண்கள் படிக்க வேண்டும் என்றுதானே கூறப்பட்டிருக்கின்றது. பழங்காலப் பெண்களும் நவயுக மாதர்களுக்குக்கூடக் கல்விகற்ற வழிகாட்டியா யிருந்தது மல்லாமல் உபதேசமும் செய்திருக்கிருர்கள். கல்விக்கே தலைவியென்று ஒரு பெண்ணை வைத்துப் போற்றும் போது. பெண்கள் படிக்கக் கூடாதென்று கூறுவது வரட்டு வேதாந்தமல்லவா ? நவநாகரீகம் என்னும் சொல்லே தெரியாத அக்காலப் பெண்டிர்களே படித்தார் களென்ருல் இன்றைய பெண்கள் ஏன் படிக்கக்கூடாது. படிக்காத பெண்களும் இதுகாறும் குடும்பம் நடத்தியிருக்கிருர்களே ஏன் இன்று நடத்தமுடியாது என்றும் கூறுகிருர்கள். ஆயினும் இவற்றையெல்லாம் உப்பில்லாக் கறி என்று கூறினும் மிகையாகாது. உப்பில்லாவிட்டால் கறி உருசிக்குமா ? அது மட்டுமல்ல காலம் மாறி மாறி வரும்போது நாமும் காலத்துக் கேற்றபடி கோலத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமல்லவா ? ஐரோப்பா போன்ற கண்டங்களில் வசிக்கும் மாதர்கள் வானுலகவீதியிலே விமானம் ஓட்ட நம் நாட்டுப் பெண்களுக்குக் குடும்பத்தையாகிலும் ஓட்டிச் செல்ல முடியாமலல்லவா இருக்கிறது. இத்தகைய இழி நிலையிலிருக்கும் நம் சமுதாயத்தை. நம் நாட்டை முன்னேற்ற பெண்கள் கல்விகற்க வேண்டுமல்லவா? தம் சிருர்கள் மானிலத்தே பிறந்து உலகோர் போற்று முத்தமராய்த் துலங்கவேண்டு மென்ருல் அவர்தாய்மார் அவரைச் சிறுவயதிலிருந்தே கல்வி என்னும் பனிநீரில் நீராட்டி வளர்த்தாக வேண்டும். நாம் இவற்றில் இருந்து வெள்ளிடை மலைபோல் விளங்குவது என்னவென்ருல் பெண்களுக்கும் கல்வி கற்பிப்பது அத்தியாவசியமாகும் என்பதே.

---

## அறிவுப் போட்டி இல. 2.

முடிவு திகதி 20-12-56 பிரவேசக் கட்டணமில்லை

மாணவர் மன்ற அங்கத்தவர்கள் மாத்திரம் பங்கு பற்றலாம்.

1. சுப்பிரமணியபாரதியார் இறந்த திகதி எது ?
2. யாழ்ப்பாணத்து அரசர்கள் உபயோகித்த கொடி எது ?
3. உலகத்தில் அகலமும் ஆழமுமான நதி எது ?
4. மகாத்மா காந்தியின் தந்தை பெயரென்ன ?
5. குண்டலகேசிரி என்னும் தமிழ்நூலின் ஆசிரியர் யார் ?
6. வாளை உபயோகிப்பவர்கள் வாளினுலேயே உயிரை இழப்பார்கள். இது யார் வாக்கு ?

# மரணத்தின் வாயிலிலே ...?

( சி. நடராசா, கிளிநொச்சி )

இரவு பத்துமணி. எங்கும் ஒரே இருள். அந்தக் காரிருளுக்குக் கம்பீர மூட்டுவது போல் பிறை நிலவு அடி வானத்திலே அஸ்தமன மாகிக் கொண்டிருந்தது.

அந்த இருளிலே ஓர் அறைதை உருவம் அசைந் தசைந்து சென்றது அவ்வுருவத்தோடு வேறோர் உருவம் ஒன்று வந்து கலந்தது. அது பேசிற்று. "யார் ரமணியா ? உன்னைத்தானே தேடிக் கொண்டு வந்தேன், வாம்மா வீட்டிற்குப் போகலாம்" என்று கூறியது. "யாரையா நீங்கள் என்பெயர் எப்படி உங்களுக்குத் தெரியும் ? என்றது அப்பெண் உருவம். "எல்லாம் வீட்டிற்குப் போய்ப் பேசிக் கொள்ளலாம், பயப்படாமல் என்னுடன் வாம்மா" என்றது ஆண் உருவம். இரண்டு உருவங்களும் ஒரு குகையை நோக்கி விரைந்தன,

தேவராயன் என்றால் சிறு பிள்ளைக்கும் தெரியும். தேவராயன் ஒரு கொள்ளைக் காரன். அவன் தன் சகாக்களுடன் குகையில் வசித்து வந்தான். அவன் சிதம்பரம் என்ற பெரிய புள்ளியைத்தான் கண்காணித்து வந்தான். இரவில் சிதம்பரம் வீட்டுப் பக்கம் போவான். விடியுமுன் குகைக்கு வந்து விடுவான். அப்படியானல் அதில் ஒரு மர்மம் இருக்கத்தானே வேண்டும் ?

இரவு சிதம்பரம் வீட்டுப்பக்கம் சென்ற தேவராயன் ஒரு அழகிய பெண்ணுடன் குகைக்குள் வந்ததைக் கண்டதும் அவன் சகாக்கள் ஆச்சரிய மடைந்தனர். தேவராயனின் திடீர்ப் பிரவேசத்தைக் கண்ட ஒரு பெண் ஓடிவந்து "அப்பா ! ஏன் இன்று இவ்வளவு நேரத்தோடு... என்று பேச்சை எடுத்தவள் பக்கத்தில் ஒரு பெண் நிற்பதைக் கண்டு "இவள் தான் என் தங்கை ரமணியா" என்றாள்.

"ஆமாம் ! மல்லிகா, உன் வெகு நாளைய ஆசை இன்று பூர்த்தியாகி விட்டதல்லவா ? என்றான் தேவராயன்.

"ஐயா ! நீங்கள் யார் ? என்னை எதற்காக அழைத்து வந்தீர்கள்" என்றாள் வேதனையோடு ரமணி.

"அம்மா நீ ஒன்றுக்கும் பயப்படாதே. இவள்தான் உன் அக்கா. நம்புகிறாயா" என்றான் தேவராயன்,

இதைக்கேட்ட ரமணிக்கு எல்லாம் புரியாத புதிராயிருந்தது. முன்பின் அறியாத ஒருத்தியைச் சுட்டிக் காட்டி என் அக்கா என்று கூறினால் எப்படி நம்ப முடியும் என யோசித்தாள். "என்ன என்னை ஏமாற்றுகின்றீர்களா ? என்றாள்.

"இத்தனை காலமாக நீ தான் ஏமாந்திருக்கிறாய்: சுமார் பதினெட்டு வருடங்களுக்கு முன் சிங்காரத் தோப்பில் நானும் கண்ணம்மாவும் வாழ்க்கை நடத்தி வந்தோம். இரண்டு வருடங்களின் பின் இதோ நிற்கிறாளே உன் அக்கா பிறந்தாள், அக்கா பிறந்து மூன்று வருடங்களின் பின் கண்ணம்மா கர்ப்பவதியானாள்.

எனக்கு ஒரு தம்பியிருந்தான். அவனுக்கும் உன் தாய்க்கும் கள்ள நட்பு இருப்பதாக உலகம் கூறியது. உண்மை என்று நம்பிய யானும் இறந்து விடுவதாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு ஒரு கொள்ளைக் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டேன். என்தம்பி மனம் தாளாதவனாய் தற்கொலை செய்து கொண்டான். உன்தாய் உணவுக்கு வழியின்றி ஊர் ஊராய்த் திரிந்தாள். ஒருநாள் உன்தாய் உன் அக்காவுடன் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்த பொழுது அக்காவைக் களவாடி வந்தேன். உன்னை ஒரு இலவச வைத்தியசாலையில் பிரசவித்தாள், பின்பு எவரிடமும் கூறிக் கொள்ளாமல் ஒரு பாழுங் கிணற்றில் விழுந்து இறந்தாள். அனாதையாக வைத்தியசாலையில் விடப்பட்ட நீ ஒரு 'நேர்ஸ்' மூலம் சிதம்பரம் என்பவரிடம் ஒப்படைக்கப் பட்டாய், துன்பத்தின் மூலகாரணத்திற் பிறந்த நீ துன்பத்தை யறியாதவளாய் சிதம்பரத்திடம் வளர்ந்து வந்தாய்.

உன் அக்காவிடம் உன்னைப் பற்றிச் சொல்லும் போதெல்லாம் "என் தங்கைக்கு ஒரு ஆபத்தும் வராதபடி காப்பாற்றுங்கள் அப்பா" என்று கட்டாயப் படுத்துவாள். உன் அக்காவின் விருப்பப்படி ஒவ்வொரு நாளும் இரவில் சிதம்பரம் வீடுவந்து போவேன். இன்று வந்தபொழுது சிதம்பரத்தின் மகன் உன் அறையை நோக்கிச் சென்றதைக் கண்டேன். அவனைப் பின்தொடர்ந்தேன். உனக்கும் அவனுக்கும் வாக்குவாதம் நடந்தது. அவன் உன்னைத் தொந்தரவு செய்ய முயன்றான். நீயோ அறையினின்றும் வெளியே ஓடினாய். அவன் பின்தொடர்ந்தான். யான் பின்முன் யோசிக்காமல் அவனைக் கொன்றுவிட்டேன். உன்னைப் பின் தொடர்ந்தேன். உன்னைக் காணவில்லை. ஓடிக்கொண்டு வரும்போது நீயும் எதிரே வந்தாய். இனி என் கடமை முடிந்தது. நீயும் உன் அக்கா மல்லிகாவும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் இருங்கள். உன் அக்காவின் அன்பு கள்ளங்கபட மற்றது. என் தீய குணங்களை மாற்றி அமைக்க ஒருவர் இருந்தாரென்றால் அது உன் அக்காதான். சரி எனக்கு நேரமாகின்றது. தாமதிப்பது சரியில்லை. சிதம்பரத்தின் மகனைக் கொன்றதற்காக எனக்கு மரணதண்டனை கிடைப்பது நிச்சயம். சரி நான் வருகின்றேன் என்று கூறிக்கொண்டே புறப்பட்டான். மல்லிகா ரமணி இருவரும் தேம்பித் தேம்பித் தடுத்தும் பயனில்லை,

தேவராயனின் கால்கள் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்தன, அவன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது மரணத்தின் வாயிலிலே.

---

## அறிவுப் போட்டி இல. 2

பரிசுபெறும் ஒவ்வொருவருக்கும் ரூபா 1. அனுப்பப்படும். விடைகளைத் தனிக் காகிதங்களில் எழுதி "மணிமாமா" வெற்றிமணி நாவலப்பிட்டி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். அங்கத்தவர்களும் 25-12-56 க்கு முன் அங்கத்தவர்களாகச் சேருகின்றவர்களுமே அறிவுப் போட்டியில் பங்குபற்றலாம். பிரவேசக் கட்டணமில்லை. முற்றிலும் சரியான விடை அல்லது கிட்டத்தட்ட சரியான விடை யனுப்புகிறவர்களுக்குப் பரிசு கொடுக்கப்படும். மணிமாமா.

# எங்கள் அரங்காவ

(செல்வி பத்மாவதி செல்லத்துரை — அரங்காவ)

காண்போர் கருத்தைக் கவரும் வனப்புமிகு கண்டிமா நகரிலிருந்து பன்னிரண்டாம் மைலிலுள்ளது அரங்காவ என்னும் கிராமம். எழில் மிகுந்து வளம் பொங்கும் இக்கிராமத்தில் வதிவோர் அனைவரும் சிங்கள வரேயாவர். இவர்கள் மத்தியில் சொந்த நிலம் உள்ளவர்களும், பிழைப்புக்காக வந்தவர்களுமான ஒருசில தமிழர் குடும்பங்களுமுள. ஆனால், தமிழை வெறுத்தொதுக்கும் தனிச்சிங்கள புரட்டிக் கலகங்கள் இன்று வரை இங்கு ஏற்படவில்லை. அந்தமட்டில் இங்குறு செந்தமிழர் அதிஷ்டமானவர்களே !

இங்குள்ளவர்கள் பெரும்பாலோர் ஒப்புயர்வற்ற உழவுத் தொழிலையே தம் சீவனோபாயமாகக் கொண்டுள்ளனர். ஏனையோர் வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். இங்கு ஆவணி மாதத்தில் ஒருமுறையும், பங்குனி மாதத்தில் ஒருமுறையுமாக வருடத்தில் இருமுறை பயிர் அறுவடை செய்கின்றனர். பயிர் அறுவடை செய்து மறுபடி நெல் விதைத்து நாற்று நடும்வரை இக்கிராமம் மிகவும் கலகலப்பாக இருக்கும். உழவர்கள் ஏரை இழுத்துச் செல்லும் மாடுகளை விரட்டும் தொனியுடன் நாற்றுநடும் பெண்களின் பண்ணொலியும் சேர்ந்து அமைதியாகத் தூர இருந்து கேட்பவர்களுக்கு உழவுத்தொழிலின் மேன்மையை உணர்த்துமாப்போல் அமைந்திருக்கும்.

நெல்லைத் தவிர இரப்பர், கொக்கோ, தென்னை, பாக்கு, கோப்பி, தேயிலை முதலியனவும் பயிரிடப்படுகின்றன. இவைகளுடன் மா, பலா வாழை, தோடை, மங்குஸ்தீன், ரம்புட்டான், முதலிய பழமரங்களும் இன்னும் மக்களுக்குப் பயன்தரும் வெவ்வேறு காட்டு மரங்களும் ஆங்காங்கே வானுற வோங்கி வளர்ந்து மக்களின் வறுமையைப் போக்கும் பெருமையுடன் மனதிற்கு மகிழ்வுதரும் இரமணீயமும் பெற்று விளங்குகின்றன.

இக்கிராமத்தில் ஒரு பாடசாலையுண்டு. கீழ் வகுப்பினருக்கென்றும் மேல் வகுப்பினருக்கென்றும் இரண்டு பௌத்த ஆலயங்களுண்டு. ஆனால் பாரபட்சமின்றி இருதரத்தாரும் இரு கோவில்களுக்கும் சென்று வணங்குவர். இங்கு கூட்டுறவுச் சங்கக் கடையொன்றும், 7, 8, சிறு கடைகளுமுண்டு. தபாற் கந்தோரும் உண்டு. ஆனால் சிகிச்சைச்சாலை ஒன்று இங்கில்லாதது பெரிய குறையாகும். நோய்வாய்ப் பட்டோர் இங்கிருந்து ஒருமைலுக் கப்பாலுள்ள "பொக்காவெல" என்னுமிடத்துக்குப் போகவேண்டும்.

இங்கு தண்ணீர்க் குழாய்கள் இல்லை. கிணற்றிலிருந்தே மக்கள் தண்ணீர் எடுக்கின்றனர். அரசாங்கத்தார் பொது மக்களுக்கென இரு கிணறுகள் கட்டியிருக்கின்றனர். இவைகளில் பாகுபாடின்றி எல்லா மக்களும் தண்ணீர் எடுப்பர்.

எல்லாவற்றிலும் நன்மை நிறைந்த இக் கிராமத்தில் ஒரு சிறு குறைவுமுண்டு. அதாவது, திப்பலி மரங்களிலிருந்து சிலர் கள் இறக்குகின்றனர், இக்குடி கெடுக்கும் குடியைக் குடிப்பதினால் குடும்பச் சச்சரவுகள் உண்டாவதுடன் சில நேரங்களில் இக்கிராமத்தின் அமைதியும் சீர்குலைந்து விடுகின்றது.

கண்டியிலிருந்து பொக்காவெல என்னு மிடத்திற்குச் செல்லும் "பஸ்" இக்கிராமத்தினூடே செல்கின்றது. எந்நாளும் சீதோஷ்ண ஸ்திதி சிறந்த முறையிலிருப்பதால் இக்கிராம மக்கள் வறுமைப் பிணியால் அதிகம் பாதிக்கப் படுவதில்லை. பேராதனையிலிருந்து குருநாக்கலுக்கு எடுத்துள்ள மின்சார இணைப்பு வசதி இக்கிராமத்தினூடே செல்வதால் பயன் தரும் தருக்கள் மிகுந்திருந்த பல தோட்டங்கள் அவ்வழிக்கு இரையாகி விட்டன. இவைகளுக்கு நஷ்ட ஈடாகப் பணம் கொடுக்கப் படுமென அரசாங்கத்தார் வாக்குறுதி கொடுத்துள்ளனர். எனினும் பரம்பரையாக நின்று பயன்தரும் மரங்களுக்கு ஓரிடந்தனில் நிலை நில்லாது உருண்டோடிடும் பணங்காசு ஈடாகுமா? இணையாகுமா?

## சன்லைட் பரிசுப் போட்டி.

**பரிசு ரூபா 10,000** **முடிவு திகதி 31-12-56**

கூப்பன்கள் சன்லைட் வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்க. கூப்பன்களில் கொடுக்கப்பட்டுள்ள 10 குறிப்புகளும் கீழேயுண்டு. யாம் 6 வகையாக விடைகளை வரிசையாகத் தெரிவு செய்துள்ளோம். நேயர்கள் ஆராய்ந்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தினசரி நமது குடும்பத்தோர் பார்வையாயிருப்பர். | 2 | 9 | 10 | 8 | 9 | 2 |
| ஆடைகள் தினசரி தோய்த்தால் உடுக்க இன்பம் தரும். | 4 | 8 | 9 | 10 | 10 | 1 |
| வேலை எளிது — அடித்துத்துவைக்க வேண்டியதில்லை. | 7 | 4 | 8 | 1 | 8 | 4 |
| ஆடை நீடித்து — உழைக்கும் வியர்வையால் கெடாது. | 10 | 1 | 7 | 6 | 7 | 5 |
| தினசரி தோய்ப்பது சுகாதாரத்துக்கு நல்லது | 5 | 10 | 3 | 7 | 1 | 8 |
| நாள்தோறும் தோய்த்தால் சில உடைகள் போதுமானவை. | 6 | 6 | 6 | 5 | 6 | 9 |
| தினசரிச் சலவை ஆடைகளைச் சுத்தமாக வைத்திருக்கும். | 9 | 5 | 2 | 3 | 5 | 6 |
| வாரத்திற்கொரு பெரிய சலவையிலும் பார்க்க தினசரி சுருக்கமான சலவை எளிது. | 8 | 7 | 4 | 4 | 4 | 10 |
| தினசரி அலம்பினால் அழுக்குக் குறைவு சோப்பும் அதிகம் செலவாகாது. | 3 | 2 | 1 | 2 | 2 | 7 |
| புதிய சன்லைட் துணிகளை வெண்மையாகவும் பளிச்சென்றும் வைக்கும். | 1 | 3 | 5 | 9 | 3 | 3 |

விலாசம் :- சன்லைட் பரிசுப் போட்டி, த. பெ. நிர். 1114 கொழும்பு.

# சுதந்திரன் போட்டி இல. 33

**திட்டமான விடைகள்** முடிவு திகதி 22-12-56.

இ. வ. 1 அபிவிருத்தி, 5 சாங்கி, 7 கறையான், 8 ரணம், 11 தாதன் 15 தொடி, 16 மைக்கூடு. 18 கதம்பம். 20 சிலை, 22 புகை, 24 கனே.

மே. கீ. 1 அகத்தூய்மை, 2 பிறை. 12 தலைக்கனம், 13 நடிகை, 14 பாடும், 15 தொல்லை, 17 கூதல். 20 சிகை, 24 கரி.

## மாற்று விடைகள்

இவ. 10. பசை—பிசின்; பலி—சோறு எமது விடை பசை

இவ. 14. பாகம்—பங்கு;—பாடம்—ஓதும் பாடம்
மனனஞ் செய்வது பாடத்தை: எமது விடை பாடம்

இவ. 25 பரி—குதிரை;—அரி—குதிரை.
அரி ஒன்றுக்குமேற்பட்ட மிருகங்களைக்குறிக்கின்றது. பரி—குதிரை என்ற மிருகத்தை மாத்திரம் குறிக்கின்றது எனவே எமது விடைபரி

இ. வ. 26., விளக்கம்—விளக்கு: சஞ்சாரம்—நடமாட்டம்; வயக்கம்
வெளிச்சம்—பிரபை: பழக்கம்—அறிமுகம்; விளக்கம்
துலக்கம்—பிரகாசம்; புழக்கம்—பழக்கம்
எண்ணற்றவிடைகளுண்டு - விளக்கம், வெளிச்சம், துலக்கம், சிறந்த விடைகள்—எமது தெரிவு—விளக்கம்.

மே. கீ. 3. வியாழன்—தேவகுரு: வியாதன் — வியாசன்; வியாதன், வியாசன் பொருத்தமற்றவை. எமது விடை வியாழன்

மே. கீ. 5. சாம்பல்; சாம்பர் ஒரேபொருளுடையன. எமதுவிடைசாம்பர்.

மே. கீ. 6 திம்; திசை; திசி, திகை; ஒரேபொருளுடையன எமது விடை திம். மாற்றுவிடை திசை.

மே. கீ. 19 பயனை-பசனை: பசனை எருமுதலிய உரம் எமது விடைபயனை

மே. கீ. 23 ஓடம், காலம், கோலம், போதம். யானம்-தெப்பம் என்ற பொருளுடைன-பாலம்—ஆற்றுப்பாலம். தெப்பம் இருந்தாற்போல் எல்லா ஆறுகளையும் கடப்பது சுலபம் என்று கூறிவிட முடியாது. எமது விடை பாலம், மாற்றுவிடை கலம், ஓடம்.

## இணைப்புகள்

மே. கீ. 4 திரணை—உருண்டை. இ. வ. 9 பிணை, இணை
திரளை—திரணை, தளை—இளை, ஒரே கருத்துடைய விடைகள். எனினும் திரணை—பிணை எமது தெரிவு.
மாற்று விடைகள்; திரளை—தளை; திரணை—இணை.

மே. கீ, 21 அமலை இ. வ. 21 அனல்—தீ
கமலை. கனல்—நெருப்பு.

தினகரன் போட்டி இல. 11 ல் இலக்குமி என்ற குறிப்புக்கு அமலை என்ற விடை எடுக்கப்பட்டது. எமது தெரிவு அமலை—அனல், மாற்றுவிடை; கமலை—கனல்,

**கவனிக்க:** மே. கீ. 13 க்கு நடிகி என்றும், மே. கீ. 20 க்கு சிகா என்றும், இ. வ. 22க்கு புகா என்றும் வரக்கூடுமா? இல. 33, 34 இரண்டின் விடைகளும் தனித்தனி வெளியிடப்பட மாட்டாதாகையால் நேயர்கள் சிந்தித்து எழுதுக.

— ஆசிரியர்

## மாணவர் மன்ற அங்கத்தவர்கள்

156 கே. ஏ. கோவிந்தன். 2-ம் டிவிஷன் நாரங்கலே பதுளே.
157 த. பாலசேகரம் மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.
158 கே. எம். யாக்கூப் ஹஸன் அ சி பாடசாலே ஒட்டமாவடி.
159 ஆர். இரங்கசாமி அர்ச் மரியநாயகி பாடசாலே பொர்கவந்தலாவ.
160 எம். ஸி. எம். சுஹைப் 69 ஆண்டியா கடவத்தை, கம்பளே,
161 பி. எம். எஸ், முகம்மது ஹஸன் கி நா கல்லூரி குருநாக்கல்,
162 உ, மு, அப்துல் சலாம் 177 பழையசோனகதெரு கொழும்பு
163 எம், எம். ஈரவன் அ த பாடசாலே பெரிய- கிண்ணியா
164 எம், ஏ, காதர் அசோக வித்தியாசாலே கண்டி.
165 தோ, மனுவல் அர்ச் சூசையப்பர் த பா திரிகோணமலே,
166 செல்வி ஜே, டி, நோனு இல 6 யூ.சி.வீடு கடுகண்ணுவவீதி கம்பளே
167 சு. நாகராசா அ த பாடசாலே மாங்குளம்,
168 எம், எம். உபைத்துல்லா அ ஆ பாடசாலே பெரிய கிண்ணியா,
169 மு. ஜமால்தீன் ,, பெரிய கிண்ணியா,
170 ஹென்றி ராசு அர்ச்சூசையப்பர் தமிழ் பாடசாலே திரிகோணமலே,
171 கி. வடிவேலு ஐ ச சைவ வித்தியாசாலே சுழிபுரம்.
172 செல்வி க. மகேஸ்வரி ஐ ச சைவ வித்தியாசாலே சுழிபுரம்,
173 செல்வி எம், எவ், அன்ஸியா 36/18 சிறுவத்த — அழுத்கம.
174 க. அந்தோனி வேதநாயகம் 248 மணச்சேனே கொச்சிக்கடை
175 க. இரா. முத்துச்சாமி பெமோர்சன் தோட்டம் அக்கரபத்தனே.
176 செ, நாகேந்திரன் Care க. சி. செல்லத்துரை வட்டுக்கோட்டை.
177 ம, கஸ்பார் யேசுதாசன் அர்ச் வேரியார்கல்லூரி மட்டக்களப்பு
178 பி. சோமசுந்தரம் பிருல் குறூப் மடுல்கலே,
179 பொ. இரத்தினவேல் நடேஸ்வராக் கல்லூரி காங்கேசன்துறை.
180 ம. அகுஸ்தீன் டூரேஸ் 35 புத்தளம் ரேட் குருநாக்கல்.
181 என். முத்துக்குமார் பரி அந்திரேயக் கல்லூரி கம்பளே.
182 செல்வி கௌரிதேவி சு. மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை.
183 பாலதிங்கள் ஜே, ஜோள் சுசீலா ஸ்டார் நாவலப்பிட்டி.
184 யோன் அன்ரன் ஜே விக்ரர் சம்பத்திரிசியார்கல்லூரி யாழ்ப்பாணம்

---

ஆசிரியர்: ஏ. கே. சாமி.
அச்சுப்பதிப்பு: மிட்லண்ட் அச்சகம், நாவலப்பிட்டி.